இந்த திட்டம் முதலீடு செய்துவிட்டு குறைந்தபட்சம் 5 ஆண்டுகளுக்கு மேல் காத்திருக்கக்கூடிய முதலீட்டாளர்களுக்கு உகந்த திட்டமாகும்.

# பராக் பரிக நீண்டகால மதிப்பு நிதி

## (ஒரு திறந்த முனை பங்கு சார்ந்த முதலீட்டு திட்டம் (ஈக்விட்டி திட்டம்)

இது PPFAS மியூச்சுவல் ஃபண்டு வழங்கும் முதன்மை ஈக்விட்டி திட்டம். இது, பராக் பரிக் ஃபைனான்சியல் அட்வைசரி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் ஸ்பான்சர் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் நீண்டகால மூலதன வளர்ச்சியை நாடும் முதலீட்டாளர்களுக்கு உகந்தது.

இத்திட்டத்தின் முதலீட்டு நோக்கம்

ஒரு முனைப்புடன் நிர்வகிக்கப்பட்ட தொகுப்பிலிருந்து, முக்கியமாக பங்கு மற்றும் பங்கு தொடர்புடைய பத்திரங்களிலிருந்து நீண்டகால மூலதன வளர்ச்சியை உருவாக்க விழைவது இந்த முதலீட்டின் நோக்கமாகும். இந்த திட்டத்தில் இந்திய பங்குகள், வெளிநாட்டு பங்குகள் மற்றும் தொடர்புடைய முறையாவணங்கள் மற்றும் கடன் பத்திரங்களில் முதலீடு செய்யப்படும்.

இத்திட்டம் தங்களுக்கு உகந்ததா என்பது குறித்து சந்தேகமிருக்குமானால் முதலீட்டாளர்கள் தங்கள் நிதி ஆலோசகர்களை கலந்தாலோசிக்க வேண்டும்.




முதலீட்டாளர்கள், அவர்களது முதலீட்டு தொகை மிதமான அளவு அதிக இடருக்கு உட்பட்டது என்பதை புரிந்துகொள்கின்றனர்.



PPFAS MUTUAL FUND
There's only one right way©

## மியூச்சுவல் ஃபண்டு வழங்குபவரின் (ஸ்பான்சரின்) பின்னணி :

PPFAS மியூச்சுவல் ஃபண்டு (பரஸ்பர நிதி), பராக் பரிக் ஃபைனான்சியல் அட்வைசரி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் ஸ்பான்சர் செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனம், முதலில் ஒரு தனியுரிமை நிறுவனமாக 1979-ல் அமைத்துருவாக்கப்பட்டது மற்றும் அதன்பின்பு 1992-ல் ஒரு கார்பரேட் நிறுவனமாக மாற்றப்பட்டது.

பராக் பாரிக் நிதி ஆலோசனை சேவைகள் நிறுவனம், இந்தியாவின் முதல் �ளுநுடீஐ (இந்திய பங்குச்சந்தை வாரியம்) பதிவுபெற்ற போர்ட்போலியோ மேனேஜர்களில் ஒன்றாக தனது போர்ட்போலியோ மேலாண்மை திட்டத்தை (ீஆளு) 1996-ல் தொடங்கியதிலிருந்து, நிதி மேலாண்மையில் இதன் அனுபவம் ஆரம்பமாகியது.



நீல் பராக் பாரிக்

இதன் நிறுவனரான காலஞ்சென்ற திரு. பராக் பாரிக், நீண்டகால முதலீட்டில் உறுதியான நம்பிக்கை கொண்டவர். இவர் இன்று விதைத்துவிட்டு நாளை மறுநாளே அறுவடையை எதிர்பார்க்க முடியாது என்ற ‘பண்ணை விவசாய சட்டம்’ என்பதனை ஏற்று செயல்படுத்தியவர். ஒவ்வொரு விதையும் முதிர்வதற்கு முன்பு எப்படி பல கட்டங்களை கடந்துவர வேண்டியுள்ளதோ அதேபோன்று, முதலீடு செய்வதில் எதிர்பார்க்கப்படும் வெற்றியும் விடாமுயற்சியைப் போன்று பொறுமையையும் சார்ந்துள்ளது.

இன்று இந்நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியான, அவரது மகன் திரு. நீல் பராக் பாரிக் தலைமையிலான ஒட்டுமொத்த நிதிக்குழுவினரும் அதே மதிப்பீடுகளை கடைப்பிடிப்பதன் மூலம் இம்மரபைத் தொடர்கிறார்கள்.

## முதலீட்டு வழிமுறை மட்டுமே மாறியிருக்கிறது... கோட்பாடு மாறவில்லை.

வரவிருக்கும் பரஸ்பர நிதியில் கவனம் சிதறாமல் செயல்பட வேண்டும் என்பதற்காக, பரஸ்பர நிதி உரிமம் பெறுவதற்கு சற்று முன்பு, 2013 தொடக்கத்திலேயே எங்களுடைய PMS-ல் புதிய வாடிக்கையாளர்களை ஏற்றுக்கொள்வதை நாங்கள் நிறுத்திவிட்டோம்.

எனினும், முதலீட்டுக்கான வழிமுறை மட்டுமே மாறியிருக்கிறது. நிறுவனத்தின் தலைமையில் உள்ளவர்களும் மற்றும் மதிப்புள்ள முதலீட்டின் மீது கொண்டுள்ள உறுதியான நம்பிக்கையும் மாறவில்லை.

## எங்களுடைய முதலீட்டு அணுகுமுறை :

- வெறும் பங்குகளை மட்டும் வாங்குவதில்லை; மாறாக, தொழில் நிறுவனத்தில் ஒரு பங்கினை வாங்குகிறோம்.
- மிகையாக பணம் செலுத்துவதை தவிர்க்கிறோம்... பாதுகாப்பு வரம்பெல்லையை கொண்டு பங்குகளை வாங்குகிறோம்.
- ரொக்கம் பெருக்கும் குறைந்த கடனுள்ள நிறுவனங்களில் பங்குகளை வாங்குகிறோம்.
- சிறுபான்மை பங்குதாரர்களுக்கு தோழமை கொண்ட நிர்வாகங்களோடு கூட்டு சேர்கிறோம்.
- தொழில்களாக, துறைகளாக அல்லது கருப்பொருள்களாக இருந்தாலும் திடீர் கவர்ச்சி மற்றும் ஈர்ப்புகளிலிருந்து நாங்கள் விலகி நிற்போம்.

## எங்களுடைய திட்டம், பொறுமையோடு இருக்கிற முதலீட்டாளர்களுக்கு சிறந்த உகந்த திட்டமாகும்:

- பங்கு முதலீடுகள் என்பவை, நீண்டகாலத்திற்கு மட்டுமே சிறந்த முதலீடுகளாகும் என்பதை புரிந்துகொள்பவர்கள்.
- சிக்கலான தீர்வுகளைவிட எளிதான முதலீட்டு தீர்வுகளை விரும்புபவர்கள்.
- பங்குச்சந்தையின் ஏற்றஇறக்க நிலையை கண்டு பயப்படுவதைவிட, வரவேற்கக்கூடியவர்கள்

பராக் பரிக நீண்டகால மதிப்பு நிதியானது...

- பெரிய நிலை நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்யலாம். டைநிலை மற்றும் சிறிய நிலை சந்தை மதிப்புடைய நிறுவனப்பங்குகளில் முதலீடு செய்யலாம.
- வெளிநாட்டு பங்குச்சந்தைகளில் பட்டியலிடப்பட்ட பங்குகளில் முதலீடு செய்யலாம
- ஆர்பிட்ரேஜ் (பங்குகளில் நடைபெறும் வாணிப) வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ளலாம்.
- பங்குகளை திரும்ப வாங்குதல் மற்றும் இதர சிறப்பு சூழ்நிலைகளில் பங்கேற்றல

மற்றபடி சொல்வதென்றால், இது ‘உண்மையிலேயே’ ஒரு பன்முகத்தன்மை கொண்ட பங்கு முதலீட்டுத் திட்டமாகும்.

மேலும் விவரங்களுக்கு எங்கள் வலைதளத்தில் திட்டத்தகவல் ஆவணம் (SID) மற்றும் கூடுதல் தகவல் அறிக்கை (SAI)-யை தயவுசெய்து பார்க்கவும்.

## திட்டம் குறித்த தகவல்

| | |
|---|---|
| குறைந்தபட்ச முதலீடு | ஒருமுறை தொகை மற்றும் மாதாந்திர SIP-க்கு ரூ. 1000/- காலாண்டு SIP-க்கு ரூ. 3000/- |
| குறைந்தபட்ச **SIP** காலஅளவு | மாதாந்திர அளவு : 6 மாதங்கள்; காலாண்டு ரீதியில் : 4 காலாண்டுகள். |
| **NAV** அறிவிப்பு | ஒவ்வொரு “அலுவல் தின” முடிவில் நிகர சொத்துமதிப்பு (NAV) அறிவிக்கப்படும். |
| திட்டத்திலிருந்து விலகிக்கொள்வதற்கான கட்டணம | முதலீட்டு தேதியிலிருந்து 365 நாட்களுக்குள் விலகிக்கொள்வதற்கு 2%; 366-லிருந்து 730 நாட்களுக்கு 1%; 730 நாட்களுக்கு மேல்: ஒன்றுமில்லை. |
| மூலதன ஆதாய வரிக்கு நடவடிக்கை | மற்ற பன்முகப்படுத்தப்பட்ட இந்திய பங்கு திட்டத்தைப்போன்றது. |
| மேலாண்மையின் கீழ் சொத்துக்கள் மற்றும் விரிவான போர்ட்போலியோ | AUM மற்றும் விரிவான முதலீட்டு தகவல்தாள்கள www.amc.ppfas.com என்ற எங்களுடைய வலைதளத்தில் ‘Scheme’ என்ற பிரிவின்கீழ் உள்ளன. |

சொத்து ஒதுக்கீடு: இந்த திட்டத்தின் மொத்த முதலீட்டுத் தொகையானது, முக்கியமாக பங்குகளிலும் மற்றும் பங்கு தொடர்புடைய முறையாவணங்களிலும் முதலீடு செய்யப்படும். இந்த திட்டத்தில் அதன் பணமாக்கத் தேவைகளை அவ்வப்போது சமாளிப்பதற்காகவும் மற்றும் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பங்குதாரர்களின் நலன்களை பாதுகாப்பதற்காகவும் மொத்த நிதியிலிருந்து ஒரு பகுதியை கடனிலும் மற்றும் பணச்சந்தை முறையாவணங்களிலும் முதலீடு செய்ய நேரிடலாம். இந்த திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு கடன் பத்திரங்களிலும் முதலீடு செய்யலாம். இயல்பான சூழ்நிலைகளில், இந்த திட்ட போர்ட்ஃபோலியோவின் சொத்து ஒதுக்கீடு (நிகர சொத்துக்களில் %) பின்வருமாறு இருக்கும்:

| முறையாவணங்களின் வகை | குறைந்தபட்ச ஒதுக்கீடுகள் (நிகர சொத்துகளில் %) | அதிகபட்ச ஒதுக்கீடுகள் (நிகர சொத்துகளில் %) | இடர்விவரக்குறிப்பு |
|---|---|---|---|
| பங்கு மற்றும் பங்கு தொடர்பான முறையாவணங்கள் | 65 | 100 | இடைநிலையிலிருந்து அதிகம் வரையிலான இடர்வாய்ப்பு |
| கடன் பத்திரங்கள், பணச்சந்தை முறையாவணங்கள் | 0 | 35 | குறைந்த நிலையிலிருந்து இடைநிலை வரையிலான இடர்வாய்ப்பு |
| அன்னிய பங்கு மற்றும் பங்கு தொடர்பான முறையாவணங்கள் | 0 | 35 | இடைநிலையிலிருந்து அதிகம் வரையிலான இடர்வாய்ப்பு |

மேலும் விவரங்களுக்கு எங்கள் வலைதளத்தில் திட்டத்தகவல் ஆவணம் (SID) மற்றும் கூடுதல் தகவல் அறிக்கை (SAI)-யை தயவுசெய்து பார்க்கவும்.

## தாங்கள் நடத்தும் நிறுவனத்திலேயே தங்கள் சொந்த பணத்தை முதலீடு செய்வது.

இந்த திட்டத்தின் மொத்த நிதியில் கிட்டத்தட்ட 13% ஸ்பான்சர், சொத்து மேலாண்மை நிறுவனம் மற்றும் பணியாளர்களால் செய்யப்பட்ட முதலீடுகள் உள்ளடங்கும். இந்த பங்கு உடமைகளின் முழுவிவரங்கள் amc.ppfas.com. என்ற வலைதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே எமது யூனிட்தாரர்கள் இருக்கும் அதே பக்கத்தில் நாங்களும் இருக்கிறோம். எமது யூனிட்தாரர்கள் வெற்றிபெறுவார்கள் என்றால் நாங்களும் வெற்றிபெறுவோம்.

## நிதி மேலாளர்கள்



திரு. ராஜீவ் தாக்கர்
ஈகுவிட்டி ஃபண்டு மேலாளர்
B.Com. (பாம்பே யூனிவர்சிட்டி)
பட்டயக்கணக்காளர்
CFA சார்ட்டர் ஹோல்டர்
Grad ICWA



திரு. ராவ்னக் ஓங்கார்
வெளிநாட்டு முதலீடுகளுக்கான
பிரத்யேக ஃபண்டு மேலாளர்
B.Sc., IT (பாம்பே யூனிவர்சிட்டி)
MMS-ஃபைனான்ஸ் (பாம்பே யூனிவர்சிட்டி)



திரு. ராஜ் மேத்தா
கடன் நிதிய மேலாளர்
M.Com (பாம்பே யூனிவர்சிட்டி)
பட்டயக்கணக்காளர்
CFA நிலை III தேர்ச்சி

For more details visit our website **amc.ppfas.com** and download the Communication Kit, contained on our Home Page.


## PPFAS Asset Management Private Limited

81/82, 8th Floor, Sakhar Bhavan, Ramnath Goenka Marg, 230 Nariman Point,
Mumbai - 400 021. INDIA.
**Tel:** 91 22 6140 6555, **Fax:** 91 22 6140 6590

| | |
|---|---|
| **Investor Helpline** | **Toll Free:** 1800 266 7790, **Whatsapp:** 90046 16537, **Email:** mf@ppfas.com |
| **Distributor Helpline** | **Call:** 91 22 61406538, **Whatsapp:** 77770 05775, **Email:** partners@ppfas.com |

**Website: www.amc.ppfas.com**


**Sponsor:** Parag Parikh Financial Advisory Services Private Limited CIN: U67190MH1992PTC068970.
**Trustee:** PPFAS Trustee Company Private Limited. CIN: U65100MH2011PTC221203,
**Investment Manager (AMC):** PPFAS Asset Management Private Limited. CIN: U65100MH2011PTC220623

**Download our Mobile App**

PPFAS SelfInvest
AVAILABLE ON


**Mutual Fund investments are subject to market risks, read all scheme related documents carefully.**

**Disclaimer:** In the preparation of the material contained in this document, the Asset Management Company (AMC) has used information that is publicly available, including information developed in-house. Some of the material used in the document may have been obtained from members/persons other than the AMC and/or its affiliates and which may have been made available to the AMC and/or to its affiliates. Information gathered and material used in this document is believed to be from reliable sources. The AMC however does not warrant the accuracy, reasonableness and / or completeness of any information. We have included statements / opinions / recommendations in this document, which contain words, or phrases such as "will", "expect", "should", "believe" and similar expressions or variations of such expressions that are "forward looking statements". Actual results may differ materially from those suggested by the forward looking statements due to risk or uncertainties associated with our expectations with respect to, but not limited to, exposure to market risks, general economic and political conditions in India and other countries globally, which have an impact on our services and / or investments, the monetary and interest policies of India, inflation, deflation, unanticipated turbulence in interest rates, foreign exchange rates, equity prices or other rates or prices etc.

The AMC (including its affiliates), the Mutual Fund, the trust and any of its officers, directors, personnel and employees, shall not liable for any loss, damage of any nature, including but not limited to direct, indirect, punitive, special, exemplary, consequential, as also any loss of profit in any way arising from the use of this material in any manner. The recipient alone shall be fully responsible/are liable for any decision taken on this material.